# எல்லார்க்கும் எல்லாம்' என்ற லட்சியத்தோடு நடைபோட்டு வருகிறோம்!

## "இந்துஸ்தான் டைம்ஸ்" நாளிதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி...! முதல் பக்கத் தொடர்ச்சி

**செய்தியாளர் :** ஆளுநர் ரவி அவர்களுடனான உங்கள் உறவு எப்படி இருக்கிறது, ஆளுநர்கள் அரசியல் நிகழ்வுகளை நடத்துவது குறித்து உங்கள் கருத்து என்ன?

**மு.க.ஸ்டாலின்:** தனிப்பட்ட முறையில் ஆளுநர், பிரதமர் என யாருடனும் எங்களுக்கு நேரடிப் பகையில்லை. அவரவர் பதவிக்குரிய மதிப்பை உரிய முறையில் அளித்து வருகிறோம்.

ஆனால், பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான ஆட்சி அமைந்ததிலிருந்து பா.ஜ.க. ஆட்சி செய்யாத ஒருபோதும் ஆட்சி செய்ய முடியாத மாநிலங்களில் ஆளுநர்களைக் கொண்டு இணை அரசாங்கம் நடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆளுநர் மாளிகையும் பல்கலைக்கழகங்களும் ஜனநாயகம் வேட்டையாடப்படும் இடங்களாக மாறியிருக்கின்றன.

**ஆளுநர் ஆர்.என்.ரவி திருந்தமாட்டார்!**

நீதிமன்றங்கள் வாயிலாக தீர்ப்பைப் பெற்று ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுகிறது. ஆனாலும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் அசைன்மென்ட்டை நிறைவேற்றும் சட்டவிரோதப் பிரதிநிதிகளாக ஆளுநர்கள் செயல்படுகிறார்கள். தமிழ்நாட்டின் ஆர். என்.ரவி அவர்கள் திருந்த மாட்டார் என்பதை ஒரு பொதுவிழாவிலேயே தெரிவித்திருக்கிறேன்.

**செய்தியாளர் :** கூட்டாட்சி விவாதத்தை மீண்டும் அரசியல் நீரோட்டத்திற்கு கொண்டு வந்துவிட்டீர்கள். மத்திய – மாநில உறவுகளை ஆய்வு செய்வதற்கான நீதிபதி ஜோசப் குழுவுடன் நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள்?

**மு.க.ஸ்டாலின்:** டெல்லியில் இருப்பவர்கள் சுல்தான்களும் இல்லை; தமிழ்நாடு போன்ற மாநிலங்களை ஆள்பவர்கள் அடிமைகளும் இல்லை! இதைத்தான் தி.மு.க. தொடர்ந்து சொல்லி வருகிறது.

**நாடாளுமன்றத் தொகுதிகளை குறைக்கக் கூடிய நடவடிக்கை!**

மாநிலத்தில் சுயாட்சி – மத்தியில் கூட்டாட்சி என்பதை ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்தி வருகிறோம். அதன் காரணமாக, மாநிலத்தின் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலான சில நடவடிக்கைகளும், அந்தந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களும் கடந்த காலங்களில் நிறைவேறியுள்ளன. ஆனால், தற்போதைய ஒன்றிய பா.ஜ.க. அரசு தன்னை சுல்தானாக நினைத்துக்கொண்டு, மாநிலங்களின் உரிமைகள் அனைத்தையும் பறிக்க நினைக்கிறது. கல்வி உரிமை, நிதி உரிமை, வரி உரிமை, அதிகார உரிமை எனப் பலவற்றையும் பறித்து வருகிறது. தமிழ்நாட்டையும் தென்னிந்தியாவையும் முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டு, ஆட்சி அமைக்கும் வகையில் தென்னிந்திய மாநிலங்களின் நாடாளுமன்றத் தொகுதிகளை மக்கள் தொகையைக் காரணம் காட்டி குறைக்கக்கூடிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநிலங்களின் ஒன்றியம் என்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற இந்தியாவில், மாநிலங்களே இல்லாத நிலையையும், அப்படியே இருந்தாலும் அவை வெறும் முனிசிபல் கார்ப்பரேஷன் போன்ற சாதாரண அதிகாரங்கள் கொண்டவையாகத்தான் இருக்க வேண்டும் என்ற திட்டத்துடனும் பா.ஜ.க அரசு செயல்படுவதால், இந்த அச்சுறுத்தலையும் ஜனநாயக விரோதப் போக்கையும் எதிர்கொள்ளவே ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் மூன்று பேரைக் கொண்ட ஒன்றிய மாநில உறவுகள் தொடர்பான குழுவை அமைத்துள்ளோம்.

எங்கள் நோக்கம், மாநிலங்கள் அதிகார பலம் பெறும்போது ஒன்றிய அரசு வலிமையானதாகவும் பன்முகத்தன்மை கொண்டதாகவும் இருக்கும் என்பதுதான். அது நிச்சயம் நிறைவேறும். ஏனெனில், பா.ஜ.க.வே நிரந்தரமாக இந்த நாட்டை ஆளப்போவதில்லை. சர்வாதிகாரப் போக்கை காலம் தூக்கி எறிந்த வரலாறு நிறைய உண்டு.

**நாட்டின் ஒருமைப்பாடு சிதையாமல் இருப்பதற்கான பாதுகாப்பு!**

**செய்தியாளர் :** ஒன்றிய அரசின் அதிகாரத்திற்கு எதிரான தென் மாநிலங்களின் கூட்டு எதிர்ப்பை நீங்கள் வழிநடத்துகிறீர்கள். இது தேர்தல் ஆதாயங்களாக மாறும் என்று நீங்கள் நினைக் கிறீர்களா?

**மு.க.ஸ்டாலின் :** மாநில உரிமைக்கான குரலை 1957 முதலே திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்தில் எழுப்பி வருகிறது. 1962 இல் மாநிலங்களவையில் அதனைப் பேரறிஞர் அண்ணா எழுப்பினார். 1969இல் முதலமைச்சராக கலைஞர் தனது முதல் டெல்லி பயணத்தின்போதே மாநில உரிமைகளை நிலைநாட்டக் குழு அமைக்கப்படும் என்றார். ராஜமன்னார் குழுவின் அறிக்கையைப் பிரதமர் இந்திரா காந்திக்கு அனுப்பினார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத்தை அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அனுப்பி வைத்தார். தி.மு.க முன்னெடுத்த அந்தக் குரலைத்தான் பிற மாநிலங்களும் எதிரொலித்தன.

பிரதமர் மோடி அவர்கள் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது தன்னுடைய மாநில உரிமைக்காகப் பேசவில்லையா?

கேரளாவில் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் தலைமையிலான இடதுசாரி அரசு கவிழ்க்கப்பட்டபோதும், ஜம்முகாஷ்மீரின் மாநில அந்தஸ்து பறிக்கப்பட்டபோதும் அந்தந்த மாநிலங்களின் குரலாக ஒலித்தது திராவிட முன்னேற்றக் கழகம். அதன் தொடர்ச்சியாகத்தான் இப்போதும் மாநில உரிமைகளுக்கான நடவடிக்கைகளை தி.மு.க. மேற்கொள்கிறது. இது வெறும் தேர்தல் ஆதாயத்திற்கானதல்ல; நாட்டின் ஒருமைப்பாடு சிதையாமல் இருப்பதற்கான பாதுகாப்பு!

**தமிழ்நாட்டையும் – தமிழர்களையும் பா.ஜ.க. தொடர்ந்து வஞ்சிக்கிறது!**

**செய்தியாளர் :** மொழி, மக்கள்தொகை அடிப்படையிலான எல்லை நிர்ணயம், நீட், வக்ஃப் சட்டம், வரி வருவாயைப் பகிர்தல் போன்ற எண்ணற்ற பிரச்சினைகள் தொடர்பாக நீங்கள் ஒன்றிய அரசை எதிர்த்து வருகிறீர்கள். அதே நேரத்தில் திராவிடர்கள், ஆரியர்களுக்கு முந்தையவர்கள் என்பதை அறிவியல் பூர்வமாக நிரூபிக்க தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளுக்கு நிதியை வாரி வழங்கியுள்ளீர்கள். 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இந்த முயற்சி களுக்குப் பின்னால் உள்ள உத்தி என்ன? முன்மொழியப்பட்ட தொகுதி மறுசீரமைப்பு பா.ஜ.க.வுக்கு உதவும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**மு.க.ஸ்டாலின் :** நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று மாநிலங்களவையில் தனது முதல் பேச்சில் சொன்னவர் பேரறிஞர் அண்ணா. அதனால் நாங்கள் மராத்தியர்களுக்கோ, வங்காளிகளுக்கோ, குஜராத்திகளுக்கோ எதிரானவர்கள் அல்ல என்பதையும் அதன் தொடர்ச்சியாக அண்ணா குறிப்பிட்டார். அதையே கலைஞர், 'உறவுக்குக் கை கொடுப்போம் – உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்றார்.

## தமிழ்நாட்டையும் – தமிழர்களையும் பா.ஜ.க. தொடர்ந்து வஞ்சிக்கிறது!

தமிழ் மொழி இந்தியாவின் மூத்த மொழி என்பதை பல்வேறு அறிஞர்கள் ஆய்வாளர்கள் ஆதாரப்பூர்வமாக நிரூபித்திருக்கிறார்கள். இந்தியாவின் முதல் செம்மொழித் தகுதி பெற்ற மொழியும் தமிழ் மொழிதான்.

தமிழ்நாட்டின் ஜனநாயக உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடுகிற நிலையில், தமிழின் சிறப்பையும், தமிழர்களின் பெருமையையும் நிலைநாட்ட வேண்டிய கடமையும் எங்களுக்கு இருக்கிறது. இரும்புத் தாதினில் இருந்து அதனைப் பிரித்தெடுத்து இரும்புக்கருவிகள் செய்யும் தொழில்நுட்பம் 5300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருந்தது என்பதை அறிவியல்பூர்வமாக நிலைநாட்டியிருக்கிறோம். இத்தகைய பெருமைமிக்க ஒரு மொழியையும் அதன் மக்களையும் வாழ்த்துவதற்கு கூட பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய பா.ஜ.க. அரசினருக்கு மனமில்லை என்றால் தமிழர்களை இந்தியாவின் இரண்டாம்தரக் குடிமக்களாக நினைக்கிறார்களா என்ற கேள்வி எழுவது இயல்பு.

வடமாநிலங்களில் தனக்குள்ள செல்வாக்கே போதும் என்ற நினைப்பில் தமிழ்நாட்டையும் தமிழர்களையும் பா.ஜ.க. தொடர்ந்து வஞ்சிக்கிறது.

**தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய நிதியைத் தரவில்லை!**

**செய்தியாளர் :** பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் அல்லாத பிற மாநிலங்களில் நிதி பகிர்வு தேக்கமடைந்துள்ளதாக தமிழ்நாடு மற்றும் பிற எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் கூறுகின்றன? இந்தப் பிரச்சினையில் நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் ஒரு சாத்தியமான தீர்வாக இருக்குமா?

**மு.க.ஸ்டாலின் :** இந்தி மொழித் திணிப்பை ஏற்காததால் ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய நிதியைத் தரவில்லை. தமிழ்நாட்டைப் போலவே கேரளா, மேற்கு வங்கம் போன்ற பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களும் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக்கூட பேரிடர் நிவாரண நிதியை உரிய முறையில் வழங்கவில்லை. 15வது நிதிக்குழு பரிந்துரைத்த அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடோ, வரிப்பகிர்வோ ஒன்றிய பா.ஜ.க. அரசால் வழங்கப்படவில்லை. தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் நலன் சார்ந்த சாதகமான எந்தத் தீர்வுக்கும் பா.ஜ.க. தயாராக இல்லை என்பதையே இவை காட்டுகின்றன.

**திராவிட மாடல் ஆட்சியில் முன்னேற்றப் பாதையில் மாநிலம்!**

**செய்தியாளர் :** மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் ஊழல் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்ப இந்த பிரச்சினைகளை நீங்கள் பெரிதுபடுத்துகிறீர்கள் என்ற எதிர்க்கட்சியின் விமர்சனத்திற்கு நீங்கள் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறீர்கள்? உங்கள் நான்கு ஆண்டுகால ஆட்சியில், நீங்கள் என்ன சாதித்தீர்கள், என்ன செய்யத் தவறிவிட்டீர்கள்?

**மு.க.ஸ்டாலின் :** எதிர்க்கட்சிகளும் அரசியல் செய்ய வேண்டுமே?

அதுவும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து மக்களிடம் அம்பலப்பட்டு நிற்கின்ற பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. அரசியல் செய்ய ஏதாவது வேண்டுமே?

அதற்காக அவர்கள்தான், நாட்டிற்கு அத்தியாவசியமான தீர்வுகளைப் பின்தள்ளிவிட்டு, பூதக்கண்ணாடி வைத்து குறைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்கும், மாநிலத்தின் அமைதித்தன்மைக்கும் எவ்வித இடையூறுமில்லாத நிலையில், இடையூறு செய்ய நினைக்கும் அரசியல் சக்திகளின் சதிவேலைகளைக் கண்டறிந்து முறியடித்தும், மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**செய்தியாளர் :** தற்போதைய பதவிக்காலத்தில் ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தி.மு.க. அரசிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்கலாம்?

**மு.க.ஸ்டாலின் :** 2021 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு முன்பாக மார்ச் 2021இல் திருச்சியில் நடைபெற்ற 'விடியலுக்கான முழக்கம்' மாநாட்டில் அடுத்த 10 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு திட்டங்கள் என்று ஏழு உறுதிமொழிகளை வழங்கினேன். அந்த இலக்குகளை அடைவதற்கான பயணத்தில்தான் எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையை மாற்றி, இன்று 9.69 விழுக்காட்டு வளர்ச்சியுடன் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டைத் தலைநிமிர்ந்து நடைபோட வைத்திருக்கிறோம். 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற சமத்துவ – சமூகநீதி லட்சியத்தோடு, ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை நிர்ணயித்துக் கொண்டு கடமையாற்றிக் கொண்டிருக்கிறோம்.

**அரசின் சாதனைகளுக்கு மக்கள் ஆதரவு!**

**செய்தியாளர் :** 2026 சட்டமன்றத் தேர்தலில் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடிக்க திமுக எவ்வாறு தயாராகி வருகிறது, அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் பொதுவான குறிக்கோள் உங்களைத் தோற்கடிப்பதாகும்.

**மு.க.ஸ்டாலின் :** தி.மு.க. தன் கொள்கைக் கூட்டணியுடன் வலிமையாக இருக்கிறது. அந்த வலிமையை எதிர்த்து வெற்றி பெற முடியாதவர்கள், தி.மு.க.,வை வீழ்த்தலாம் என்று எந்தவிதக் கொள்கையும் இல்லாமல் கூட்டணி சேர்ந்திருப்பதை மக்கள் நன்றாகவே அறிந்திருக்கிறார்கள். தி.மு.க.,வின் கொள்கைக் கூட்டணிக்கு மக்கள் ஆதரவு இருப்பதாலும், திராவிட மாடல் அரசின் சாதனைகள் அ.தி.மு.க.வினர் உள்பட தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தின ருக்கும் உண்மையான பலனைத் தந்திருப்ப தாலும் 2026ல் மீண்டும் வெற்றி பெறும் அளவிற்கு தி.மு.க.வும்அதன் கூட்டணிக் கட்சிகளும் வலிமையாக இருக்கிறது. எதிரணியினர்தான் தங்களுக்குச் சவால் யார் என்பதைத் தேட வேண்டும்.

**செய்தியாளர் :** ஒன்றிய அரசுக்கு எதிரான உங்கள் எதிர்ப்பில் அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகாவுடன் தமிழகத்தின் நீர் தொடர்பான பிரச்சினைகளில் எவ்வாறு சமநிலைப்படுத்த திட்டமிட்டுள்ளீர்கள்?

**மு.க.ஸ்டாலின் :** மாநில சுயாட்சிக் கொள்கை என்பதே மாநிலங்களுக்கிடையிலான இணக்கமான முறையில் சுமுகமான – பாதிப்பில்லாத தீர்வுகளை எட்டுவதுதான். அண்டை மாநிலங்களுடன் தி.மு.க. அரசு நல்லுறவை வளர்க்கும்! தமிழ்நாட்டிற்குரிய பங்கினைப் பெறும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

---

### அயலக அணி துணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி எம்.சி. ஏற்பாட்டில்

## எழும்பூர் தொகுதியில் 12 இடங்களில் தண்ணீர் பந்தல் திறப்பு!

சென்னை, மே 14 -

சென்னை கிழக்கு மாவட்டம் - எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99 வது வார்டில் 12 இடங்களில் தண்ணீர் பந்தல் துவக்க விழா, தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனைப்படி,தி.மு.க அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஏற்பாட்டில் தண்ணீர் பந்தலை திறக்கப்பட்டு பொதுமக்களுக்கு தர்பூசணி, இளநீர், நுங்கு, வெள்ளரிக்காய், மற்றும் மோர் வழங்கப்பட்டது,

தண்ணீர் பந்தல் வைக்கப்பட்ட இடங்கள், புல்லாபுரம், சாஸ்திரி நகர், நேரு பூங்கா, நான்சி தெரு,வெள்ளலார் தெரு,திடீர் நகர்,பிரிக்ளின் சாலை,புரசைவாக்கம் நெடுஞ்சாலை,கங்காதேஸ்வரர் கோயில் சாலை,சண்முகராயன் தெரு, பொன்னப்பா தெரு, டாக்டர் அழகப்பாசாலை, ஆகிய இடங்களில் வைக்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பாண்டி பஜார் பூக்கடை அருகில் தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. தலைமையில் வட்டக் கழக செயலாளர்கள் பி. ஜெயக்குமார், பி.மாரி பகுதி துணை செயலாளர் பாபா சுரேஷ் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்றது. கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு எம் எல் ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் எஸ். மோகன், கோ.சு. மணி, மாம்பலம் ஆ.சந்திரசேகர், ராஜா அன்பழகன் எம்.சி. மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

### நல்லிகுப்புசாமி – வி.ஜி.சந்தோஷம் – சிவசங்கரி – வெ.இறையன்பு -- கவிஞர் முத்துலிங்கம் பங்கேற்பு!

## இராயப்பேட்டையில் கவிதை உறவு-53ஆவது ஆண்டுவிழா! நூல்கள் வெளியீடு!

### கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் ஏற்புரை!

சென்னை, மே 14 -

கவிதை உறவு -53 ஆவது ஆண்டு விழா கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், கவிஞர் சுந்தரகேசி ஆகியோரது நூல்கள் வெளியீட்டு விழா இந்திய அதிகாரிகள் சங்க அரங்கம், 69, திரு.வி.க. நெஞ்சாலை, இராயப்பேட்டையில் 18.05.2025-ஞாயிறு மாலை 6 மணியளவில் நடை பெற்றது.

இவ்விழாவில் கவிஞர் எஸ். விஜயகிருஷ்ணன் வரவேற்கிறார்.

இவ்விழாவிற்கு பத்மபூஷன் நல்லி குப்புசாமி தலைமையேற்று மலரை வெளியிடுகிறார். நூல்களை வெளியிட்டு கவிஞர் முத்துலிங்கம், கவிஞர் தங்கம் மூர்த்தி ஆகியோர் பாராட்டுரை வழங்குகின்றனர்.

டாக்டர் வானதி இராமநாதன் அறிமுக உரையாற்றுகிறார்.

கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் எழுதிய 'என்றும் இருக்கும் வானம்' எனும் நூலை திருமதி விஜயா தாயன்பனும், 'ஞாயிற்றுக்கிழமைகளில் நான் பொய் பேசுவதில்லை' எனும் நூலை டாக்டர் சேதுகுமணனும் 'எல்லாம் நன்மைக்கே' எனும் நூலை கவிஞர் வடுகம் சிவகுமாரும்,

கவிஞர் சுந்தரகேசி எழுதிய 'அறவுரைகள் தந்த நெறிமுறைகள்' எனும் நூலை கவிஞர் தவசீலனும் பெற்றுக் கொள்கின்றனர்.

எழுத்தாளர் திருமதி சிவசங்கரி விருதுகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

சிறந்த நூல்களுக்கான பரிசுகளை முனைவர் வெ.இறையன்பு வழங்கி நிறைவுரையாற்றுகிறார்.

விருதுகள் அறிமுகமும் நிர்வாகமும் குறித்து பேராசிரியர் தமிழ் இயலன், முனைவர் கணபதி சுப்பிரமணியம், கவிஞர் ஸ்ரீதேவி துரையரசு ஆகியோர் பேசுகின்றனர்.

விழாவில் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் ஏற்புரையாற்றுகிறார்.

புலவர் சு.மதியழகன் நன்றி கூறுகிறார். திருமதி ரோஜா மணி நிகழ்வை தொகுத்து வழங்குகிறார்.

இவ்விழாவில் கவிதை உறவு - 2024 ஆம் ஆண்டு வெளியான சிறந்த நூல்களுக்கான இலக்கியப் பரிசுகள் வழங்கப்படுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் தலைமையில் எர்ணாவூரில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் எம்.ஆனந்தன், ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம், தி.மு. தனியரசு எம்.சி., கே.பவுல், முருகா எஸ். ஆறுமுகம், ஜி.ஹரிஹரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட கழக பிரதிநிதி ந.ராம்குமார் நன்றி கூறினார்.

